தொகுதி ௧
சித்திரம் ௪

# பொன்னிவளநாட்டின் வீர சரித்திரம்

# உரிமையுள்ள காதலி




www.ponnivala.com

© 2012 Ponnivala Publishing

பகுதி-1 சித்திரம்-4

## உரிமையுள்ள காதலி

ஊர் ஊராக ஓடி திரிந்த அநாதை சிறுவன் குன்னுடையான், இறுதியாக நல்லவுள்ளம் கொண்ட இரண்டு பண்ணையார்களிடம் ஆடு மாடுகளை மேய்ப்பவனாக வேலைக்கு சேர்ந்தான். நாளடைவில் பண்ணையார்களின் தங்கைமேல் காதல் வயப்பட்டான். ஆனால் அவளோ அந்தஸ்தில் இவனுக்கு மிக எட்டா உயரத்தில் இருந்தாள்.







மறுவர்ணனை
பிரெண்டா பெக். இ கசாண்ட்ரா கொர்நால்

தமிழாக்கம்
சிவசங்கர் நவரட்ணம்
சத்தியபாமா

சித்திரங்கள்
ரவிசந்திரன & குழு

வடிவமைப்பு
பிரியா கோவிந்தராஜன்
ஸ்டெப்பான் ஹானிஹன்


ஒப்பச்சர்
முலர்விழி ராஜ்

வெளியீட்டாளர்
பொன்னிவளா பப்ளிகேசன்
© 2012
சாப்ட்சைன்ஸ் அசோசியேசன் லிமிடட்.







குன்னுடையான், கடந்த காலங்களைப் பற்றி நினைத்துப் பார்த்தான்.
நான் மிகவும் துன்பப்படுகிறேன். என் பெற்றோர்கள் இறந்த பிறகு, என்னிடம் அன்பு காட்ட யாருமில்லை.
பொறாமை பிடித்த பங்காளிகள் என்னை அடிமை போல நடத்தி வேலை வாங்கினர். அத்தோடு, என்னை அடித்து அவமானப்படுத்தி, பிச்சை எடுக்க வைத்து ராகிக்கூழையே உண்ணக் கொடுத்தனர். என்னை ஒரு அனாதையைப்போல் நடத்தினர். தலையில் விறகு சுமந்து விற்றேன்.
ஆ! அதோ ஒரு அழகான கோவில்கோபுரம் தெரிகிறது. அங்கே போனாலாவது என் வாழ்வு நன்றாக இருக்குமா?



ஆ ... ஆ . .
ஆ...
குன்னுடையான் கோபுரம் தெரிந்த திசையை நோக்கி ஓடினான். ஓடும் பொழுது கல் தடுக்கி கீழே விழுந்தான். ஆனால் ஏதோ ஒருவித சக்தி அவனை அவன் வழியில் தொடர்ந்து செல்லத் தூண்டியது.


குன்னுடையான் கோவில் கோபுரம் தெரிந்த திசையில் ஓடி, வாளவந்தியை வந்தடைந்தான்.
கொக்கரக்கோ.. கோ...
அப்பொழுது வாளவந்தியில் உள்ள பெரிய நிலக்கிழார்கள் விநாயகர் கோவில் முன்பாக அமர்ந்திருந்தனர்.
யார் அந்த சிறுவன்? நம் கிராமத்துக்குள் ஓடுகிறான். அவனை பிடித்து இங்கே கொண்டு வா!
நிலக்கிழார்கள் அவ்வழியால் ஓடிய சிறுவனைப் பார்த்தனர்.


யார் நீ? எங்கிருந்து வருகிறாய்?
சாமி! என்னை அடிக்க வேண்டாம்.
நான் ஒரு அநாதை! எந்த தப்பும் செய்யவில்லை.
கவலைப்படாதே! நான் உன்னை அடிக்கமாட்டேன்..என்னுடன் வா! கோயிலில் அமர்ந்திருக்கும் நிலக்கிழார்கள் உன்னை கூட்டி வரச் சென்னார்கள்.
எதற்காக இங்கே வந்தாய்?
சிறுவனே! யார் நீ?


சாமி! என் பெயர் குன்னுடையான். நான் காவேரி ஆறு பாயும் பொன்னிவளநாட்டிலிருந்து வருகிறேன்.
என் ஊரில் யானையை வைத்துத்தான் நெல் தாம்பாடப்படும். பொன்னிவளநாட்டை தங்கம் விளையும் பூமி என்று மக்கள் கூறுவர்.
நான் என் பங்காளிகளால் வளர்க்கப்பட்டேன். ஆனால், அவர்கள் என்னை அடித்து அவமானப்படுத்தினர். இரவில் நான் மாட்டுக்கொட்டகையில்தான் தூங்குவேன். ஐந்து வருடங்கள் நான் உணவாக ராகிக் கூழை மட்டுமே குடித்தேன்.
சிறுவனாய் இருக்கிறாய் ஆனால் பெரியவர் போல் பேசுகிறாயே!
இப்பொழுது எங்கே செல்கிறாய்?
எங்கே போகிறது என்று எனக்கு தெரியவில்லை.


என் வேலைக்கு யார் குழம்பும் சாதமும் உணவாக தருகிறார்களே! நான் அவர்களுடனேயே தங்கி விடுவேன்.
அடப்பாவமே! யாரும் உனக்கு குழம்பும், சாதமும் போடவில்லையா? என் வீட்டில் தங்கி கொள்கிறாயா?
நான் உனக்கு வேலை தருகிறேன். அத்தோடு எப்பொழுதும் குழம்பும, சாதமும் போடுகிறேன்.
நீங்கள் என்ன வேலை சொன்னாலும் நான் செய்கிறேன். தயவு செய்து, எனக்கு குழம்பும் சாதமும் போடுங்கள்.
நல்லது! சரி வா நம் வீட்டுக்குப் போகலாம்.
நிலக்கிழார்கள் குன்னுடையானுக்கு வேலையும் தந்து, சாதமும் போடுவதாக கூறினார்கள். அதற்கு அவனும் ஒப்புக்கொண்டான். ஆகவே, வாளவந்தியிலுள்ள அவர்களின் வீட்டிற்கு அழைத்து சென்றனர்.


தங்களின் மனைவிமார்களிடம், எதற்காக இந்த சிறுவனை வீட்டிற்கு அழைத்து வந்தோம் என்று விளக்கி கூறினர்.
பெண்களே! இது குன்னுடையாக்கவுண்டர்.
இவன்! பங்காளிகளால் மிகவும் துன்பத்திற்கு உள்ளானான்.
இனிமேல் இவன் இங்குதான் இருக்கப்போகிறான். நம்முடைய காட்டிலும், வீட்டிலும் உங்களுக்கு உதவியாக இருப்பான்.
இவ்வளவு சின்னப்பையனாக இருக்கிறானே? இவனுக்கு விவசாயத்தைப்பற்றி என்ன தெரியும்?
ம்...... நம்மிடம் நிறைய ஆடு, மாடுகள் இருக்கிறது. ஆனால்! இவன் எப்படி அனைத்தையும் மேய்ப்பான்?


அம்மா! நான் காராள குடும்பத்தில் பிறந்த உண்மையான விவசாயின் மகன்.
என் தந்தையிடம் நிறையக் கால்நடைகள் இருந்தது.
அதனால், எப்படி மேய்பதென்று எனக்கு தெரியும்.
ஓ...அப்படியா... சரி!
விவசாயம் செய்வது எங்கள் பரம்பரைத் தொழில்.
அம்மா! நீங்கள் எனக்கு குழம்பும் சாதமும் உண்ணத்தந்தால், என்ன வேலை சென்னாலும் நான் செய்கிறேன்.


இந்த சிறுவன் பெரியவர்கள் போல் பேசுகிறான். நீங்க என்ன சொல்றீங்க அக்கா! இவனுக்கு குழம்பும், சாதமும் போடலாமா?
நிச்சயமாக! அவன் நமக்கு வேலை செய்தால் நாம் அவனுக்கு சோறு போடலாம்.
நல்லது! அவனுக்கு முதலில் சாப்பாடு போடுங்கள். அவன் சாப்பிட்ட பின் ஓய்வெடுக்கட்டும்.
பணிப்பெண்ணே! இங்கே வா!
இவனுக்கு நம் குளியல் அறையைக்காட்டு. இவன் போட்டுக்கொள்ள நல்ல உடைகளைக் கொடு.
சரி சாமி!


ஆகா! சிறுவன் என்ன ஒரு அழகு!
அந்த சிறுவனின் முகம் சூரியனைப்போல் ஜொலித்தது. நிலக்கிழார்கள் அவனைப் பார்த்து ஆச்சரியப்பபட்டனர்.
சாப்பிடுவதற்கு அவனுக்கு இலையைப் போடுங்கள்.
சாதமும், குழம்பும் அவனுக்கு வேண்டும் வரைக்கும் கொடுங்கள்.


காஞ்சி நாதா!
என்ன ஒரு இனிமையான நாள்! கடந்த பத்து வருஷத்தில் இது போல் ஒரு நல்ல சாப்பாட்டை சாப்பிட்டதில்லையே!
சரி குன்னுடையா நீ சிறிது நேரம் ஓய்வெடுத்துக்கொள்.
நான் மாலையில் வந்து, நீ என்ன வேலை செய்ய வேண்டும் என்று சொல்கிறேன்.



குன்னுடையா! எழுந்திரு! பொழுது சாய போகிறது.
வடக்கே இருக்கும் நம் நத்தகாட்டுத்தோட்டம் போகலாம். அங்கே தான் எங்களது ஆடு, மாடுகள் மேய்கின்றன.
சரி சாமி!
குன்னுடையான் அவனுடைய மேல்துணியை அழகாக மடித்து வைத்தான்.


ம்ம்மமாாா...
பேபேபே...
ம்ம்மமாாா...
இதுதான் நம் மாட்டுக்கொட்டாரம்.
உனக்கு எப்படி ஆடு மாடுகளை மேய்ப்பதென்று தெரியும் தானே?
ஆமாம் சாமி! இந்த வேலையைத்தான் நான் இவ்வளவு காலமும் செய்தேன்.
குன்னுடையா! சமீபத்தில் நம் ஆடு மாடுகள் பெருகிவிட்டன.
ம்ம்மமாாா...




நீ அவைகளை மேய்த்து, பாலையும் கறந்து விடு.
பேபேபே...
நம் தோட்டத்தில் உள்ள ஊஞ்சலில் தங்கை ஆடவரும் பொழுது, நீ ஆட்டிவிடு. அவள் மகிழ்ச்சியடைவாள்.
இரவு உணவு சாப்பிட்ட பின் கொட்டாரத்திற்கு சென்று படுத்துக்கொள்.
சரி சாமி!


விரைவில் குன்னுடையான் அந்த நிலக்கிழார்களின் தங்கையை காண்கின்றான். "என்ன ஒரு அழகான பெண்" என்று அங்கேயே மலைத்துப் போய் நின்றுவிடுகிறான்.
ஆ...! கடவுளின் குழந்தையைப் போல் இருக்கிறார்களே!


குன்னுடையா! உன் வேலையெல்லாம் எப்படி செல்கிறது?
சாமி! நான் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன்.
மிக்க மகிழ்ச்சி! நீ என் தங்கையின் ஊஞ்சலை ஆட்டி விடுவதை மறக்கவில்லையே?
இந்த ஊஞ்சலில் ஆடும் தேவதை உங்களுடைய தங்கையா? அவள் தாமரை மலரை விட அழகானவள்!
ஆமாம் குன்னுடையா! என் தாய், பெண் குழந்தை வேண்டும் என்று நினைத்தார்கள். அது நடக்கவில்லை.
ஓ...!


இறுதியில் தாமரைத் தடாகம் சென்று பனிரெண்டு வருடங்கள் கடுந்தவமிருந்தார்கள்.
சிவனும் பார்வதியும் என் தாய் பூமியில் தவமிருப்பதை பார்த்தார்கள்.
அவர்கள், தாமரைக் குளத்தின் அருகில் கடுந்தவத்தில் ஆழ்ந்திருக்கும் என் தாயை மெச்சி, என்ன வரம் வேண்டும் என்று கேட்டனர்.


என் தாய்க்கு குழந்தை வரம் வேண்டும் என்று அவர்களுக்கு தெரிந்ததும், மானாய் வடிவெடுத்து விளையாடினார்கள்.
அப்பொழுது சிவனின் இந்திரியம் கனிந்து தடாகத்தில் இருந்த தாமரை மலரில் சென்று விழுந்தது.
உடனே அது பெண்குழந்தையாக மாறி அழத்தொடங்கியது.


தவம் செய்து கொண்டிருந்த என் தாய், குழந்தை அழும் சத்தம் கேட்டு கண் திறந்து பார்த்தார். எதிரே தாமரை மலரில் குழந்தை இருப்பதை கண்டார்.
அப்பொழுது சிவனும் பார்வதியும் அங்கு தோன்றி, குழந்தை உன்னுடையது என்றும், அதை அன்புடன் வளர்க்க வேண்டும் என்று கூறினர்.
அத்தோடு, இந்த குழந்தை தாமரை மலரில் தோன்றியதால் இவளுக்கு "தாமரை" என்று பெயர் சூட்டி அழையுங்கள் என்றார்.
என்ன அற்புதமான கதை! இவள் கடவுளின் குழந்தையா? அதுதான் இவ்வளவு அழகாக இருக்கிறாள்.


ம்ம்ம்மமாாா,,,
ம்ம்ம்மமாாா,,,
இந்த அழகான பெண்ணைத் திருமணம் செய்யப்போகும் அதிஷ்ட்டக்காரன் யார்?
பேபே
ம்... நிச்சயமாக அவன் என்னைப்போல் ஒரு வேலைக்காரனாக இருக்கமாட்டான்.



குன்னுடையான் கடுமையாக உழைத்தான். அவன் ஊஞ்சலில் ஆடும் தாமரையை தூரத்திலிருந்து ரகசியமாய் பார்ப்பான். தினமும் அவனுடைய அன்றாட வேலையைச் செய்ய மறக்கவில்லை. நிலக்கிழார்களின் குடும்பம் அவனை நன்றாக பார்த்துக் கொண்டது.







பசுக்களிடமிருந்து பாலை கறந்து கொண்டு போய் நிலக்கிழார்களின் மனைவிகளிடம் கொடுத்தான்.







ஆமாம்! இப்பொழுது தான் எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு வந்தேன்.
நீங்கள் அன்பானவர்கள், எனக்கு தினமும் குழம்பும், சோறும் போடுகிறீர்கள்.
நான் தங்கவளநாட்டில் மிகவும் கஷ்டங்களை அனுபவித்தேன். ஆனால் இங்கே சந்தோஷமாக இருக்கிறேன்.
குன்னுடையா! நீ இங்கே இருப்பதனால் எங்களுக்கு மகிழ்ச்சி. கடுமையாக உழைக்கிறாய் நீ நேர்மையானவன்.
உன்னை எங்கள் குடும்பத்தில் ஒருவனாகப் பார்க்கிறோம்.
நீ பெரியவனானதும் உனக்கு நாங்கள் திருமணம் செய்து வைப்போம்.
குன்னுடையா! வெளியே வந்து என்னுடன் விளையாடு.
போ குன்னுடையா! சென்று விளையாடு.


வருடங்கள் சில கடந்தது, வாளவந்தியில் நல்ல மழை பெய்து நாடு செழிப்பாக இருந்தது.
குன்னுடையான் வளர்ந்து அழகிய வாலிபனாக தோன்றினான். தாமரையும் போற்றத்தக்க பேரழகுடன் யுவதியானாள். குன்னுடையானுக்கு அவளை பிடித்திருந்தது ஆனால் அதை வெளியில் செல்லாமல் மறைத்து வைத்திருந்தான்.


அதே நேரத்தில், பொன்னிவளநாட்டில் கோலாத்தாவின் பங்காளிகள், செல்வச் செழிப்புடன் வளமாக இருந்தனர். ஆனால், இருபத்தைந்து வருடங்களாக செல்லாத்தாளுக்கு யாரும் பூஜை செய்து வணங்கவில்லை.
கோலகத்தா கவுண்டர் உயிருடன் இருந்த போது எனக்கு ஒரு நாளைக்கு மூன்று வேளை பூஜை செய்தார்.
ஆனால் இப்பொழுது, இந்தப் பங்காளிகள் என் கோவிலைக்கூட சுத்தம் செய்வதில்லை.
குன்னுடையான் எங்கே இருக்கிறான்?
நான் சென்று என் அண்ணன் விஷ்ணுவிடம் என்ன நடந்தது என்று கேட்கப்போகிறேன்.



ம்... எங்கே
சென்றுவிட்டார்?
செல்லாத்தா விஷ்ணுவைத் தேடி சென்றாள். வைகுந்தத்தில் அவருடைய ஆதிசேஷன் மட்டும் தான் இருந்தது. அவரைக் காணவில்லை.
செல்லாத்தா தேடிக்கொண்டே இருந்தாள். இறுதியில் அவளுடைய அண்ணனை ஒரு அழகான நந்தவனத்தில் உறங்கிக்கொண்டிருக்கும் பொழுது கண்டுபிடித்தாள்.


தங்கையே! எப்படி இருக்கிறாய்?
நான் நன்றாக இல்லை.
பொன்னிவள நாட்டில் உள்ள என் கோவிலில், கோலாத்தாக் கவுண்டர் இருந்த போது எனக்கு ஒரு நாளைக்கு மூன்று வேளை பூஜை செய்வார். ஆனால் அவர் இறந்த பின்பு என்னை எல்லோரும் மறந்துவிட்டனர்.
வருஷம் பல கடந்து விட்டது. யாரும் என் கோவிலை சுத்தம்கூட செய்யவில்லை. பங்காளிகள் நிலத்தின்மேல் தான் கண்ணாய் இருக்கிறார்கள். எனக்கு ஒரு நன்றி கூட தெரிவிக்கவில்லை.
அவர்களுக்கு நீயும் நிலமும் ஒன்றுதான் என்று தெரியவில்லை.
குன்னுடையான் எங்கே இருக்கிறான்? அவனை நீங்கள் தான் கண்டுபிடிக்க வேண்டும் அண்ணா!
செல்லாத்தாவின் குறையை கேட்ட விஷ்ணு அவளுக்கு உதவுவதாக வாக்களித்தார். அவருக்குத் தெரியும் குன்னுடையான் பொன்னிவள நாட்டில் உள்ள அவனுக்கு உரித்தான அரண்மனையையும், நிலத்தையும் கைப்பற்றுவதற்கு இதுதான் சரியான நேரம் என்று. செல்லாத்தா பொன்னிவள நாட்டில் உள்ள அவளுடைய கோவிலுக்கு புறப்பட்டுச் சென்றாள்.
நீ சொல்வது சரிதான். குன்னுடையான் தான் உன் கோவிலை பார்த்துக்கொள்ள சரியான ஆள்.
எனக்கு அவன் எங்கே இருக்கிறான் என்று தெரியாது. நான் பூமிக்குச் சென்று அவனை தேடுகிறேன்.

அதே சமயம் விஷ்ணு தன் கருடவாகனமேறி பூமிக்குச் சென்றார். அங்கே வாளவந்தியில் உள்ள கொட்டாரத்தில் குன்னுடையான் தூங்காமல் இருப்பதைப் பார்ததார். விஷ்ணு துறவி போல் வேடமிட்டு, அங்கு சென்று "குன்னுடையா" என்று பெயர் சொல்லி அழைத்தார்.






கிழக்கே போகும் பாதையில் தொடர்ந்து வந்தேன். அது என்னை இங்கே கொண்டு வந்து சேர்த்தது.
விஷ்ணு துறவி போல் வடிவெடுத்து கொட்டாரத்தில் குன்னுடையானுக்கு அருகில் அமர்ந்து அவனுடன் பேசத் தொடங்கினார்.
நான் வாளவந்தி செல்ல வந்தேன், இங்கிருந்த மக்கள்தான் கூறினார்கள் குன்னுடையானுக்கு வழி தெரியும், அவனிடம் கேட்டால் சரியாக காட்டுவான் என்று.
இந்த வழியாகச் சிறிது தூரம் சென்றால் ஒரு புன்னைமரம் தென்படும். அதன் வலது புறமாக திரும்பி நடந்தால் வாளவந்தியை அடையலாம்.
என்று கூறியபடி துறவி கீழே படுத்துக்கொண்டார்.
அப்பா! நான் மிகவும் களைப்பாக இருக்கிறேன். இங்கே சிறிதுநேரம் தங்கி, ஓய்வெடுத்து விட்டு பிறகு செல்கிறேனே!


பெரியவரே! தாங்கள் எங்கேயிருந்து வருகிறீர்கள்?
அப்பனே! நான் ஒரு துறவி! எனக்கு போக்கிடமோ, உறவுகளோ எதுவும் இல்லை.
சரி! உன்னைப் பற்றிக் கூறு.
நான் காவேரி ஆறு பாயும் பொன்னிவள நாட்டில் பிறந்தவன். எனக்கு சொல்லும்படியாக எதுவுமில்லை.
நான் வாளவந்தியில் உள்ள நிலக்கிழார்களின் பண்ணையில் வேலை செய்கிறேன்.
அடக்கடவுளே! என்ன ஆச்சர்யம்! உன் சொந்த மாமனிடமே வேலை செய்கிறாயா?


அய்யா! என்ன சொல்றீங்க?
விஷ்ணு இருபத்தியைந்து வருடமாக, குன்னுடையானுக்குத் தெரியாத உண்மைகளைச் சொன்னார். அவனுக்கு, அவர் சொல்வது உண்மையா?, பொய்யா? என்று நம்பமுடியாவில்லை.
அவர்கள் உன் தாயாரின் சகோதரர்கள்!
அப்படியென்றால், அவர்களின் தங்கை உனக்கு முறைப் பெண் ஆவாள்.
ஆ! இது உண்மையா? என்னால் நம்பமுடியவில்லை! அவர்கள் என் தாயின் சகோதரர்களா? அப்படியானால், நான் அவளைத் திருமணம் செய்து கொள்ள முடியுமா?
ஆம்! நீ தினமும் ஊஞ்சலாட்டி விடுகிறாயே, அவள் தான் உன் மணப்பெண்ணாவாள்.


அப்படியானால், நான் அவளை திருமணம் செய்யமுடியுமா?
நிச்சயமாக முடியும்! வா! அரண்மனைக்குச் செல்வோம்.
அரண்மனையில் இரவுக் காவலர்கள் இருப்பார்களே! நாம் எப்படி உள்ளே செல்வது?
அதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். என்னைப் பின்தொடர்ந்து வா! பயப்படாதே!
இருவரும் அரண்மனைக்குச் சென்றனர்.


இப்பொழுது ரகசியம் வெளிபட்டது.
குன்னுடையானை அவர்கள் உறவாக ஏற்பார்களா? அவன் விரும்பிய பெண்ணை திருமணம் செய்ய முடியுமா? மிகவும் வசதி படைத்த நிலக்கிழார்கள் அவர்களின் அழகான தங்கையை அவனுக்கு மணமுடித்து கொடுக்க சம்மதிப்பார்களா?

# பொன்னிவளாவை பற்றி ஒரு சிறு தொகுப்பு

பொன்னிவளா ஒரு புரதான பண்டை கால கதை. இக்கதை கிராமத்து உடுக்கை பாடகர்களால் இன்றும் ஆடலும், பாடலுமாக சொல்லப்படும் ஒரு பழங்கதையாகும்.

1965 வருடம் கொங்கு நாட்டில் உள்ள மின்வசதி இல்லாத சிறு கிராமத்தில், ஒலி நாடாவை கொண்டு, 18 இரவுகளில் ஒலி பதிவு செய்யப்பட்ட கதையாகும். முதன் முறையாக, கம்யூட்டர் 2D அனிமேஷனில் 26 தொலைக்காட்சி தொடர்களாக ஊருவாக்கப்பட்டு, பல மொழிகளில் பதிவு செய்யப்பட்டது.

ராஜாங்கம் என்பது அதன் மக்களால்தான் கட்டமைக்கப்படுகிறது. உதாரணமாக குடையுன் பரந்து விரிந்த மேல்பகுதி ராஜாங்கம் என்றால், மக்கள்தான் அதனை தாங்கி நிற்கும் கம்பிகள்.

எனவே ஒரு ராஜாங்கத்தைப்பற்றி சொல்லவேண்டும் என்றால், அந்த ராஜாங்கத்தின் மக்களை பற்றியும் சொல்லவேண்டும். அப்போதுதான் அந்த ராஜாங்கத்தைப்பற்றி முழுமையாக புரிந்து கொள்ள முடியும். இக்கதை கொங்கு மக்களின் கதை. இக்கதை தோராயமாக ஆறாம் நூற்றாண்டில் கொங்கு மக்களின் வாழ்க்கை முறையையும், அவர்களின் சமுதாய மற்றும் நாகரீக வாழ்க்கையையும் சித்தரிக்கிறது.




மேலும் பொன்னிவளாவைப்பற்றி விபரம் அறிய பொன்னிவள இணைய தளத்திற்கு செல்லுகள்
www.ponnivala.com/comic4tamil



வாருங்கள்!
# பொன்னிவள
அங்காடிக்கு

சித்திரக்கதை - HD அனிமேஷன் - விளையாட்டு - வாணிக பொருட்கள் - கேளிக்கை - மேலும் பல இலவசங்கள்!







01. காராளர் தோற்றம்
02. அநாதைச்சிறுவன்
03. நாடு கடத்தல்
04. உரிமையுள்ள காதலி
05. அதிசய கல்யாணம்
06. வருத்த விதை
07. ஆயிரம் யாசகர்கள்
08. கொடிய சாபம்
09. உத்தமியின் கோபம்
10. விரக்தியுன் பலன்
11. சாப நிவர்த்தி
12. சொர்க வாசல்
13. விதியின் கணக்கு
14. கோவில் ரகசியம்
15. உண்மை தெரிந்தது
16. நாடு திரும்புதல்
17. மானம் பெரிதென்று
18. சினம் கொண்ட சின்னவர்
19. சுதந்திரம் வென்றது
20. ஆசீர்வதிக்கப்பட்ட வாள்
21. சாம்புகனின் தந்திரம்
22. புதிய சவால்
23. நேருக்கு நேர்
24. எதிரியின் சவால்
25. பெரும் தியாகம்
26. ஒரு சகாப்தம் முடிந்தது

## 26யும் பெற்றுகொள்ள!

www.ponnivalamarket.com
மேலும் விபரங்களுக்கு இணைய தளத்திற்கு செல்க:
www.ponnivala.com


ISBN 978-1-927093-45-0
90000 >
9 781927 093450



© 2012 Ponnivala Publishing